**பெருநகர சென்னை மாநகராட்சி**

**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண். 607** **நாள்: 24.10.2026**

**வடகிழக்குப் பருவமழையினை முன்னிட்டு, வட்டார துணை ஆணையாளர்கள் மாநகராட்சிப் பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டுள்ள முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை இன்று பார்வையிட்டு ஆய்வு செய்தனர்.**

வடகிழக்குப் பருவமழையினை முன்னிட்டு, மத்திய வட்டார துணை ஆணையாளர் திரு.எச்.ஆர்.கௌஷிக், இ.ஆ.ப., அவர்கள் அவர்கள், இன்று (24.10.2026) கோடம்பாக்கம் மண்டலம், வார்டு-132க்குட்பட்ட துரைசாமி சாலையில் உள்ள மோட்டார் பம்புடன் கூடிய நீரேற்று நிலையம், பராங்குசபுரம் சுரங்கப்பாதை, வார்டு-133க்குட்பட்ட நந்தனம் கால்வாய், மேற்கு சைதாப்பேட்டை புதுத்தெரு சிறுவர் விளையாட்டு திடல் பகுதி, அண்ணாநகர் மண்டலம், வார்டு-97க்குட்பட்ட பச்சைக்கால் வீராசாமி தெருவில் உள்ள தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியக் குடியிருப்புப் பகுதி ஆகியவற்றில் மேற்கொள்ளப்பட்டுள்ள முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளையும்,

கோடம்பாக்கம் மண்டலம், இரயில்வே பார்டர் சாலையில் உள்ள மழைநீர் வடிகால்களில் தூர்வாரப்பட்டுள்ளதையும், மேற்கு மாம்பலம், அஜீஸ் நகர் தெருவில் நடைபெற்று வரும் மழைநீர் வடிகால் பணிகளையும் பார்வையிட்டு ஆய்வு செய்து, நடைபெற்று வரும் பணிகளை விரைந்து முடித்திடவும், கால்வாய்கள் மற்றும் சுரங்கப்பாதைகளில் தொடர்ந்து கண்காணிப்புப் பணிகளை மேற்கொள்ளவும் அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

தெற்கு வட்டார துணை ஆணையாளர் திரு.அ.்தாப் ரசூல், இ.ஆ.ப., அவர்கள், அடையாறு மண்டலம், வார்டு-178க்குட்பட்ட ஓ.எம்.ஆர். பகுதியில் மேற்கொள்ளப்பட்டு வரும் ஒருங்கிணைந்த மழைநீர் வடிகால் பணிகளைப் பார்வையிட்டு ஆய்வு செய்து, பணிகளை விரைந்து முடித்திட அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார். இதனைத் தொடர்ந்து, தெற்கு வட்டாரத்தில் பல்வேறு பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டுள்ள முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளையும் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

வடக்கு வட்டார துணை ஆணையாளர் திருமதி ஸ்வேதா சுமன், இ.ஆ.ப., அவர்கள், வடகிழக்குப் பருவமழையினை முன்னிட்டு மீட்பு பணிகளுக்காக வருகை தந்துள்ள தேசிய பேரிடர் மீட்புப் படை வீரர்கள் தங்க வைக்கப்பட்டுள்ள இராயபுரம் மண்டலம், அண்ணா பிள்ளை சாலையில் உள்ள முதல்வர் திருமண மாளிகையில் அடிப்படை வசதிகள் குறித்தும், அவர்களுக்கு உணவு தயாரிக்க தேவையான பொருட்களின் இருப்பு குறித்தும் பார்வையிட்டு ஆய்வு செய்தார். இதனைத் தொடர்ந்து, வடக்கு வட்டாரத்தில் பல்வேறு பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டுள்ள முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளையும் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

இந்த ஆய்வுகளின்போது, சைதாப்பேட்டை சட்டமன்ற உறுப்பினர் திரு. எம். அருள் பிரகாசம், மேற்பார்வைப் பொறியாளர் (மின்சாரம்) திரு.எம்.இளங்கோவன், மண்டல அலுவலர் திரு.ஆர்.புருசோத்தமன் மற்றும் அலுவலர்கள் உடனிருந்தனர்.

**செய்தி வெளியீடு: இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,**

**பெருநகர சென்னை மாநகராட்சி.**